**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 150/2019 |
| Name | : Uthamaraj |
| P.W. | : 1 |
| Father Name | : Chinnadurai |
| Village | : Kuppampalayam |
| Taluk | : மடத்துக்குளம் |
| Caste | : |
| Calling | : Agriculture |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.08.2021

நான் குப்பம்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . ஆஜர் எதிரிகளை தெரியும் அவர்கள் பெயர் ஐயப்பன் , பாண்டி ஆகும். சம்பவத்திற்கு முன்பு ஐயப்பனை தெரியும். பாண்டியை நான் பார்த்தது இல்லை. சம்பவத்தன்று தான் பார்த்தேன். கடந்த 03.01.2019 அன்று நான் காலை 07 மணிக்கு எனது தோட்டத்தில் சென்று பார்த்தேன். எனது தோட்டம் குப்பம்பாளையத்தில 02 ½ கிலோ மீட்டர் தள்ளி S bend என்ற இடத்தில் உள்ளது . நான் அங்கு போய் பார்த்தேன் அங்கு எனது 2 ஆட்டு கிடா (கறுப்பு கிடா –1, வெள்ளை கருப்பு கலந்த கிடா – 1) காணவில்லை. எனது சொந்தக்காரர் மணிகண்டன் , செந்தில்குமார், சிவா, நண்பர் துரைராஜ் ஆகியோர்க்கு போன் செய்தேன் அப்போது துரைராஜ் மாரியம்மன் கோவில் அருகில் மீன் கடை வைத்திருக்கிறார் அப்போது TATA ACE வாகனத்தில் எனது 2 ஆட்டு கிடாய்களை (கறுப்பு கிடா –1, வெள்ளை கருப்பு கலந்த கிடா – 1) ஏற்றிக் கொண்டு சென்று சாமராயப்பட்டி அமராவதி வாய்க்கால் அருகில் வண்டியில் இருந்தார்கள் . நான் , மணிகண்டன், துரைராஜ் , சிவா,

செந்தில் குமார் ஆகியோர்கள் சென்று பார்த்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் சாமராயப்பட்டி, அமராவதி வாய்க்கால் அருகில் TATA ACE வாகனத்தில் இருந்தார்கள். வாகனத்தின் எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் சென்று ஏன் கிடாய்களை பிடித்து வந்தீர்கள் என்று கேட்டோம் . அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார்கள் இருவரும் வண்டியின் முன் பக்க இருக்கையில் அமர்ந்திருந்தார்கள். எதிரி பாண்டி வாகனத்தை ஓட்டினார் . வண்டியின் பின்புறம் எங்களின் காணாமல் போன 2 ஆட்டு கிடாய்கள் (கறுப்பு கிடா –1, வெள்ளை கருப்பு கலந்த கிடா – 1) இருந்தது. அவர்களை கேட்டேன். அவர்கள் எங்களிடம் சண்டை போட்டார்கள் . எங்கள் கிடாய்கள் என்று சொன்னார்கள். கொமரலிங்கம் காவல் நிலையத்திற்கு நாங்கள் 4 பேரும் சேர்ந்து எதிரிகளை அழைத்துச் சென்றோம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது நான் கொடுத்த புகார் தான். அது அ.த.சா.ஆ.1 ஆகும். பின்னால் TATA ACE வாகனத்தை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்னிடம் தற்போது கருப்பு கிடா 1 மட்டும் உள்ளது. வெள்ளை கறுப்பு நிறம் கலந்த கிடாயை ஏற்கனவே வேட்டைக்கார அப்பன் கோவிலுக்கு நேர்த்திக் கடன் செய்ததால் கடந்த 2019 வருடம் 4 வது மாதம் வெட்டி விட்டோம்.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 1 கருப்பு நிற ஆட்டு கிடா மற்றும் வாகனம் அடையாளம் காட்டுவதற்காக வழக்கு வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.